அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 37/2013

எனது இல: EST 5/2/16/3
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2013.12.31

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய அரச சேவையிலுள்ள வாழ்க்கைச் செலவுப் படியின் திருத்தம்

அரசாங்கத்தினால் 2014 ஆம் ஆண்டிற்கான அதனது வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் பிரகடனப்படுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவானது பின்வரும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**02.** 2012.12.13 ஆம் திகதிய 18/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 02 இற்கமைய ஏற்கனவே சேவையிலுள்ள அரச அலுவலர்களுக்கு செலுத்தப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியானது 2014.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் ரூபா. 7800/- ஆக இருத்தல் வேண்டும்.

**03.** 2012.12.13 ஆம் திகதிய 18/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் உப பந்தி 4.1 இற்கேற்ப அமைய/நாளாந்தக் கூலி அடிப்படையில் சேவையாற்றும் தொழிலாளர்களுக்கு செலுத்தப்படும் நாளாந்த வாழ்க்கைச் செலவுப் படியானது 2014.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் ரூபா. 260/- ஆக இருத்தல் வேண்டும்.

**04.** இச் சுற்றறிக்கையின் பந்தி 02 இன் ஏற்பாடுகளுக்கமைய வாழ்க்கைச் செலவுப் படியானது முப்படைகளின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**05.** கௌரவ. அமைச்சர்கள், கௌரவ. பிரதி அமைச்சர்கள், கௌரவ. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட அலுவலர்களுக்கும் மற்றும் மாகாண சபைகளின் கௌரவ. ஆளுநர்கள், கௌரவ. முதலமைச்சர்கள் மற்றும் மாகாண சபைகளின் கௌரவ. அமைச்சர்கள் ஆகியோரின் தனிப்பட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் மேற்படி பந்தி 02 இன் ஏற்பாடுகளுக்கமைய வாழ்க்கைச் செலவுப் படியானது செலுத்தப்படுதல் வேண்டும்.

**06.** 2014.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம், 2012.12.13 ஆம் திகதிய 18/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் உப பந்தி 8:1 இற்கமைய ஓய்வுபெற்ற அரச அலுவலர்களிற்கு ஏற்கனவே செலுத்தப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியானது 2005.12.31 ஆம் திகதி வரை அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அலுவலர்கள் தொடர்பில் ரூபா. 3675/= ஆகவும் 2006.01.01 ஆம் திகதிக்குப் பின்னர், கூறப்பட்ட திகதியையும் உள்ளடக்கி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அலுவலர்கள் தொடர்பில் ரூபா. 3525/= ஆகவும் இருத்தல் வேண்டும்.

**07.** இச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம். / பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு